| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| முனைவர்.சி.உஷாராணி,<br>எம்.எஸ்ஸி., பி.எட்., பிஎச்.டி.,<br>அரசுத் தேர்வுகள் இயக்குநர்,<br>சென்னை – 600 006. | அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்<br>இணை இயக்குநர் (கல்வி) புதுச்சேரி. |

**ந.க.எண். 125746/பி1/2020** **நாள் :14.02.2020**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6– மார்ச் 2020 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு – பள்ளி மாணாக்கரின் பெயர்ப்பட்டியலை பதிவிறக்கம் செய்தல் – சரிபார்த்தல் – பெயர்ப்பட்டியலில் திருத்தம் மேற்கொள்ளுதல் – அறிவுரை வழங்குதல் – தொடர்பாக.

**பார்வை :**
1. அரசுத் தேர்வுகள் இயக்கக இதே எண்ணிட்ட செயல்முறை கடித நாள்.11.12.2019.
2. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித நாள்.30.12.2019, 03.01.2020, 09.01.2020 மற்றும் 10.02.2020.

******

பார்வையில் காணும் கடிதங்களில், நடைபெறவுள்ள மார்ச் 2020 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு பள்ளி மாணாக்கரின் பெயர்ப்பட்டியலை தயாரிக்கும் பொருட்டு அனைத்து மேல்நிலை / உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களும் தங்களது பள்ளிகளில் SSLC பயிலும் அனைத்து மாணாக்கர்களது விவரங்களையும் இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டது. அதன் அடிப்படையில் மேல்நிலை / உயர்நிலை பள்ளி தலைமை ஆசிரியர்கள் பதிவேற்றம் செய்த விவரங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மார்ச் 2020 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வுக்கான தங்கள் பள்ளி மாணாக்கர்களின் பெயர் பட்டியலை, பள்ளி தலைமையாசிரியர்கள் **17.02.2020 முதல் 19.02.2020** வரையலான நாட்களுக்குள் www.dge.tn.gov.in என்ற இணையதளத்திற்குச் சென்று பதிவிறக்கம் செய்துக்கொள்ள வேண்டுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

அவ்வாறு பதிவிறக்கம் செய்யப்பட்ட பெயர்ப்பட்டியலில் மாணாக்கர் பெயர் ஏதும் விடுபட்டிருப்பின் அதன் விவரத்தினை மாவட்டக் கல்வி அலுவலரின் பரிந்துரையுடன் **19.02.2020–க்குள்** இவ்வலுவலகத்தில் நேரில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும், மாணாக்கரின் பெயர், பள்ளிகளின் பெயர் மற்றும் மாணாக்கரின் புகைப்படம், பயிற்றுமொழி, மொழிப்பாடம் (Part-I) போன்றவற்றில் திருத்தங்கள் இருப்பதாக தெரிவித்து அவற்றில் திருத்தங்கள் மேற்கொள்ள வாய்ப்பு வழங்குமாறு சில மாவட்டக் கல்வி அலுவலகம் மற்றும் பள்ளிகளிலிருந்து கோரிக்கைகள் பெறப்படுகின்றன. எனவே, அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களும் தங்களது ஆளுகைக்குட்பட்ட அனைத்து மேல்நிலை / உயர்நிலை தலைமையாசிரியர்களும் பத்தாம் வகுப்பு தேர்விற்கான பெயர்ப்பட்டியலில் திருத்தம் மேற்கொள்வது தொடர்பாக பின்வரும் அறிவுரைகளை அனுப்பிவைத்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

1. தற்போது பதிவிறக்கம் செய்யப்படும் SSLC தேர்விற்கான பெயர்ப்பட்டியலிலுள்ள ஒவ்வொரு மாணவரது அனைத்து விவரங்களும் சரியாக உள்ளனவா என்பதனை சம்பந்தப்பட்ட வகுப்பாசிரியரும் தலைமையாசிரியரும் ஒருமுறைக்கு இருமுறை உறுதி செய்து கொள்ள வேண்டும்.
2. பின்னர் பள்ளித் தலைமையாசிரியர் பெயர்ப்பட்டியலிலுள்ள மாணாக்கரது பெயர் (தமிழ் மற்றும் ஆங்கிலத்தில்), புகைப்படம், பயிற்றுமொழி, மொழிப்பாடம் (Part-I) மற்றும் பிறந்த தேதி ஆகியவற்றில் திருத்தங்கள் இருப்பின் அதன் விவரங்களை **20.02.2020**–க்குள் சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும்.
3. மார்ச் 2020 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்விற்கான பெயர்ப்பட்டியலில் திருத்தம் மேற்கொள்வதற்கு வழங்கப்படும் இவ்வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளாமல் **20.02.2020** தேதிக்கு பிறகும் பெயர்ப்பட்டியலில் திருத்தம் கோரி இவ்வலுவலகத்தில் கடிதங்கள் பெறப்படின் சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியர் மற்றும் வகுப்பாசிரியர்கள் மீது தக்க ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மாவட்டக் கல்வி அலுவலர்கள், தங்கள் ஆளுகைக்குட்பட்ட மேல்நிலை / உயர்நிலைப் பள்ளியிலிருந்து பெறப்படுகின்ற மார்ச் 2020 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வுவெழுதும் மாணாக்கரின் பெயர் பட்டியலிலுள்ள திருத்தங்கள் தொடர்பான விவரங்களை **21.02.2020 முதல் 24.02.2020** வரையிலான நாட்களில் அரசுத் தேர்வுகள் துறை இணையதளத்திற்குச் (www.dge.tn.gov.in) சென்று தங்களுக்கான User ID மற்றும் password–ஐ பயன்படுத்தி பதிவேற்றம் செய்திட வேண்டும்.

பெயர் பட்டியலில் திருத்தங்கள் மேற்கொள்வது தொடர்பாக ஏற்படும் சந்தேகங்களை நிவர்த்தி செய்வதற்கு அந்தந்த மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்களின் அலைபேசி எண்ணையோ அல்லது கீழ்க்குறிப்பிட்டுள்ள அரசுத் தேர்வுகள் இயக்கக தொழில்நுட்பப்பிரிவின் அலைபேசி எண்களையோ தொடர்பு கொள்ள வேண்டும்.

**9498383073**

**9385494105**

எனவே, அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களும், தங்களது ஆளுகைக்குட்பட்ட அனைத்து மேல்நிலை / உயர்நிலை பள்ளிகளுக்கும் இப்பொருள் குறித்து விரைந்து சுற்றறிக்கை அனுப்புமாறு, இப்பணிக்கு முக்கியத்துவம் அளித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**ஒம்/—**
**இயக்குநர்**

**நகல்**

1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்
2. அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்